**செ. கு. எண்: 027** **நாள்: 06.03.2020**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 6.3.2020

கர்நாடக மாநிலத்திலுள்ள, தர்மஸ்தலாவிற்கு புனித பயணம் சென்று விட்டு, வீடு திரும்பிக்கொண்டிருந்த போது, கர்நாடக மாநிலம், ஹசன் மாவட்டம், குனிக்கல் என்ற இடத்தில் பக்தர்கள் பயணம் செய்த வாகனம் விபத்துக்குள்ளானதில், கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், சிக்கனப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த திரு. மல்லப்பா என்பவரின் மகன் திரு. சௌந்தராஜ், திரு.சௌந்தராஜ் என்பவரின் மகள் செல்வி திருசன்னியா, திரு. சுப்பையா என்பவரின் மகன் திரு. மஞ்சுநாத், திரு. மஞ்சுநாத் என்பவரின் மனைவி திருமதி தனுஜா, திரு. கிருஷ்ணப்பா என்பவரின் மனைவி திருமதி ரத்தினம்மா, திரு. மஞ்சுநாத் என்வரின் மகள் சிறுமி மலாஸ்ரீ, திரு. மஞ்சுநாத் என்பவரின் குழந்தை சேத்தன், திரு. மாரப்பா என்பவரின் மகள் செல்வி சரளா, திரு. லட்சுமப்பா என்பவரின் மகன் திரு. ராஜேந்திரா மற்றும் திரு. நாராயணப்பா என்பவரின் மனைவி திருமதி கௌரம்மா ஆகிய பத்து நபர்கள் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த பத்து நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் செய்தி கிடைக்கப்பெற்றவுடன், வாகனத்தில் பயணம் செய்த கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களின் விவரங்கள் குறித்து முழுத் தகவல் பெறுமாறும், அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்வதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறும் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவருக்கு நான் உத்தரவிட்டேன். எனது உத்தரவின் பேரில், தமிழ்நாடு அரசின் உயர் அதிகாரிகள் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் கர்நாடக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளனர்.

வட்டாட்சியர் தலைமையில், வருவாய்த் துறையினர் மற்றும் காவல் துறையினர் அடங்கிய ஒரு குழு, கர்நாடக மாநிலத்திற்கு சென்று இறந்தவர்களின் உடல்களை அடையாளம் கண்டு, அவர்களது குடும்பத்தினரிடம்

ஒப்படைக்குமாறும், இந்த விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு உயரிய சிகிச்சை அளிக்கவும், போர்க்கால அடிப்படையில் இந்த ஏற்பாடுகளை செய்யவும் மாவட்ட நிர்வாகத்திற்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த துயரச் சம்பவத்தின் தன்மையையும், உயிரிழந்தவர்களின் குடும்ப நிலையையும் கருத்தில் கொண்டு **உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும்; பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 50,000/- ரூபாயும்** சிறப்பினமாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**